இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 330 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 26 – புதன்கிழமை 10 ஜுலை 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 330 : Thiruvalluvar Year - 2055 - Aani 26 - Wednesday 10 July 2024 - Kovai★★ 8 Pages ₹ 5.00


## ஒன்றிய அரசின் புதிய குற்றவியல் சட்டங்களில் மாநில அளவில் திருத்தங்கள் மேற்கொள்ள

# ஓய்வுபெற்ற நீதியரசர் சத்யநாராயணன் தலைமையில் ஒரு நபர் குழு அமைப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜுலை 10-**

**ஒன்றிய அரசின் புதிய குற்றவியல் சட்டங்களில், மாநில அளவில் திருத்தங்கள் மேற்கொள்ள ஓய்வுபெற்ற நீதியரசர் சத்யநாராயணன் தலைமையில் ஒருநபர் குழு அமைத்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இந்திய தண்டனைச் சட்டம், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சிகள் சட்டம் ஆகிய சட்டங்கள் நடைமுறையில் இருந்த வந்த நிலையில், ஒன்றிய அரசால் அவை “பாரதிய நியாய சன்ஹிதா, 2023”, “பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023” மற்றும் “பாரதிய சாக்ஷியா சட்டம், 2023” என மாற்றப்பட்டு, 1-7-2024 முதல் இச்சட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன.

**ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள அவசரச் சட்டம்!**

அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக, சமஸ்கிருதத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, நாடாளு மன்றத்தில், முறையான விவாதங்கள் ஏதுமின்றியும், மாநிலங்களின் கருத்துக்களைக் கேட்காமலும், அவசர அவசரமாகக் கொண்டு வரப்பட்டுள்ள இச்சட்டங்களின் பல்வேறு பிரிவுகளை எதிர்த்து நாடெங்கும் எதிர்ப்புகளும், போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

நாடாளுமன்றத்தில் 146 உறுப்பினர்களை இடைநீக்கம் செய்துவிட்டு, மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துகளை அறிந்துகொள்ள விருப்பமில்லாமல், ஒன்றிய அரசு அவசர கோலத்தில் இச்சட்டங்களை நாடாளுமன்றத்தில் விவாதங்கள் ஏதுமின்றி, கடந்த 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிறைவேற்றியது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (8.7.2024) தலைமைச் செயலகத்தில், புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மூன்று புதிய குற்றவியல் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவருவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி. வில்சன், என்.ஆர். இளங்கோ, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா. காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், காவல்துறை கூடுதல் இயக்குநர் அபின் தினேஷ் மோதக், அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், தலைமை குற்றவியல் அரசு வழக்கறிஞர் அசன் முகம்மது ஜின்னா, சட்டத்துறை செயலாளர் எஸ். ஜார்ஜ் அலெக்சாண்டர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**புதிய சட்டங்களில் உள்ள பிரச்சினை குறித்து முதல்வர் கடிதம்!**

நாடு முழுவதும் உள்ள பெரும்பான்மையினரின் கருத்தினைப் பிரதிபலிக்கும் வகையில், இந்தப் புதிய சட்டங்களில் என்னென்ன பிரச்சினைகள் உள்ளன என்பதைத் தெளிவாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது 17-6-2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு ஏற்கெனவே தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒன்றிய அரசின் இந்த புதிய சட்டத்தின் சில அடிப்படைப் பிரிவுகளில் தவறுகள் இருப்பதோடு, மாநில அரசுகளிடமிருந்து முழுமையாக கருத்துக்களைப் பெறாமல் இவை இயற்றப்பட்டுள்ளதாக தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்த முதலமைச்சர் அவர்கள், இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதை ஒன்றிய அரசு ஒத்திவைக்க வேண்டும் என்றும், முறையாக அனைத்து மாநில அரசுகளின் கருத்துகளைப் பெற்ற பின்னரே இவ்விஷயத்தில் முடிவெடுக்க வேண்டுமென்றும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டிருந்தார்.

**மாநில அரசுக்குப் பரிந்துரைத்திட முதல்வர் தலைமையில் ஆலோசனை!**

இந்த நிலையில், தமிழ்நாடு அரசின் சார்பில் இப்புதிய சட்டங்களில் என்னென்ன சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (8-7-2024) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசின் தலைமை வழக்குரைஞர், தலைமைச் செயலாளர், உள்துறை முதன்மைச் செயலாளர், பொதுத்துறைச் செயலாளர், சட்டத்துறை செயலாளர், காவல்துறை இயக்குநர் மற்றும் அரசு குற்றவியல் வழக்குரைஞர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் முடிவில், இந்தப் புதிய சட்டங்களில் மாநில அளவில் பெயர் மாற்றம் உட்பட என்னென்ன திருத்தங்கள் கொண்டு வரவேண்டும் என்பதை ஆராய்ந்து, அரசுக்குப் பரிந்துரைத்திட, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் எம்.சத்யநாராயணன் அவர்கள் தலைமையில் ஒருநபர் குழுவினை அமைத்திட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

**ஒருமாத காலத்தில் குழுவின் அறிக்கை!**

இக்குழு இந்தப் புதிய சட்டங்கள் குறித்து தெளிவாக ஆராய்ந்து, மாநில அளவில் வழக்கறிஞர்கள் சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் ஆலோசித்து, மாநில அளவில் என்னென்ன திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்பது பற்றிய தனது அறிக்கையை ஒரு மாத காலத்திற்குள் அரசுக்கு வழங்கும்.

---

## மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில்

# கழக வேட்பாளரை வெற்றி பெறச் செய்வீர்!

## விக்கிரவாண்டி தொகுதி இறுதிக் கட்டப் பிரச்சாரத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**விக்கிரவாண்டி, ஜுலை 10 -**


**“விக்கிரவாண்டி தொகுதியில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வீர்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று இறுதிக் கட்ட பிரச்சாரத்தின்போது வேண்டுகோள் விடுத்தார்.**

தி.மு.க. இளைஞரணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

**தும்பூர் பகுதியில் தேர்தல் பிரச்சாரம்!**

அந்த வகையில், தும்பூர் பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அமைச்சர் உதயநிதிக்கு, ஆயிரக்கணக்கான மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது பேசிய அவர், தி.மு.க. வேட்பாளரை மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

விழுப்புரம் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் மற்றும் விழுப்புரம் மாவட்டத்திற்கு கொண்டு வரப்பட உள்ள புதிய திட்டங்களையும் பட்டியலிட்ட அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தோல்வி பயம் காரணமாக, பா.ஜ.க.விற்கு வழிவிட்டு விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் அ.தி.மு.க. போட்டியிட வில்லை என விமர்சித்தார்.



**நேமூர் பகுதியில் வாக்குசேகரிப்பு !**

அதனைத் தொடந்து நேமூர் பகுதியில் பரப்புரை மேற்கொண்ட அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஒன்றிய பா.ஜ.க. அரசு ‘நீட்’ தேர்வை ரத்து செய்ய மறுப்பதாக குற்றம்சாட்டினார். நீட் தேர்வுக்கு எதிராக தி.மு.க. தொடர்ந்து குரல் கொடுத்து வருவதைக் குறிப்பிட்ட அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தற்போது ‘நீட்’ தேர்வுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார்.

**அமைச்சர்கள் பங்கேற்பு!**

இந்த பிரச்சாரங்களின் போது அமைச்சர்கள் பொன்முடி, கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பெரியகருப்பன், தா.மோ. அன்பரசன், கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், மூர்த்தி, சிவசங்கர், மஸ்தான், மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெகத்ரட்சகன், ராஜேஷ்குமார், பிரகாஷ், விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் கௌதம சிகாமணி, முன்னாள் அமைச்சர் ஆவடி நாசர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

---

## விக்கிரவாண்டி தொகுதியில்

# இன்று வாக்குப் பதிவு!

### காலை 7 மணிக்கு தொடங்குகிறது!

விழுப்புரம், ஜுலை 10 –

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு இன்று (10.07.2024) காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறுகிறது. இதற்காக 276 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தொகுதியில் 1,16,962 ஆண் வாக்காளர்கள், 1,20,040 பெண் வாக்காளர்கள், திருநங்கைகள் 29 பேர் என மொத்தம் 2,37,031 பேர் வாக்களிக்க உள்ளனர்.

தேர்தல் பணியில் ஈடுபடும் போலீசார் ஏற்கனவே தேர்தல் அலுவலகத்தில் தபால் வாக்கு செலுத்தினர். இதேபோல், 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் தபால் வாக்கு செலுத்த விருப்பப்பட்டவர்களிடம் தபால் வாக்குகள் வீடு, வீடாகச் சென்று சேகரிக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளன. பதற்றமான, மிக பதற்றமான 44 வாக்குச்சாவடிகளில் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவம் பாதுகாப்புக்கும், வெப் கேமரா பொருத்தப்பட்டு நுண்பார்வையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மண்டல ஐ.ஜி. நரேந்திர நாயர் தலைமையில் விழுப்புரம் சரக டி.ஐ.ஜி. திஷாமிட்டல், 3 எஸ்.பி.க்கள் மற்றும் கூடுதல் எஸ்.பி.க்கள், டி.எஸ்.பி.க்கள், இன்ஸ்பெக்டர்கள், எஸ்.ஐ.க்கள், 5 மாவட்ட போலீசார் என 1,500 பேர் பாதுகாப்புக்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

வாக்குப்பதிவு முடிந்ததும் முகவர்கள் முன்னிலையில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு வாக்கு எண்ணிக்கை மையமான பனையபுரம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு கொண்டு சொல்லப்படுகிறது. அங்கு வேட்பாளர்கள் முகவர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டு துணை ராணுவம், ஆயுதப்படை, உள்ளூர் போலீசார் என 3 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து 13ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

**276 வாக்குச்சாவடிகள்!**

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கு 276 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் தலா ஒரு முதன்மை அலுவலர் மற்றும் 3 நிலைகளிலான வாக்குச்சாவடி அலுவலர்கள் என மொத்தம் 4 பேர் பணியாற்றுவர். அதன்படி, 276 வாக்குச்சாவடிகளில் 1,355 பேர் பணியில் ஈடுபடுகின்றனர். வாக்குப்பதிவு இயந்திரங்கள் (ஈ.வி.எம்.), விவிபேட், கட்டுப்பாட்டு இயந்திரங்கள் அனைத்தும் தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. வாக்குப்பதிவு இயந்திரங்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட ஜி.பி.ஆர்.எஸ். கருவி பொருத்தப்பட்ட வாகனங்களில், மண்டல அலுவலர்களின் முன்னிலையில் போலீஸ் பாதுகாப்புடன் நேற்று அந்தந்த வாக்குச்சாவடி மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன.

---

# வன்முறையால் பாதிக்கப்பட்ட மணிப்பூர் மாநிலம்: நிவாரண முகாம்களை பார்வையிட்டார் ராகுல் காந்தி!

*இம்பால், ஜுலை 10-*

*பயங்கர வன்முறையால் பாதிக்கப்பட்ட மணிப்பூர் மாநிலத்தில், நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களை சந்தித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குறைகளை கேட்டறிந்தார்.*

*மணிப்பூரில் இரு பிரிவு மக்களிடையே வன்முறை வெடித்த பிறகு பிரதமர் மோடி ஒருமுறைகூட மணிப்பூருக்கு பயணிக்க வில்லை என்று காங்கிரஸ் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது.*

*மணிப்பூருக்கு இரு முறை ராகுல் பயணம் மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்துள்ளார். இந்நிலையில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்ற பின், ராகுல் காந்தி நேற்று முன்தினம் முதல்முறையாக மணிப்பூர் சென்றார்.*

*ஜிரிபாம் மாவட்டத்தில் உள்ள நிவாரண முகாம்களைப் பார்வையிட்ட அவர், அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுடன் கலந்துரையாடினார்.*

*மணிப்பூரில் உள்ள நிவாரண முகாம்களை பார்வையிட்ட பின், அம்மாநில ஆளுநர் அனுசுயா உய்கேவை சந்தித்துப் பேசவும் ராகுல் காந்தி திட்டமிட்டுள்ளார்.*